நன்னிய மணநாள் இன்று,
நலம் பல பெற்று வாழ்க!
தாமரை கண்ட கோகிலம் ஈன்ற,
'முத்து ரத்தினத்தை ' கரம் பிடித்தே
முத்தும் ரத்தினமாய் மகவைப் பெற்ற,
வெற்றித் திருமகள் ஈன்ற,
ஜெயபாலன் முத்தே!
இருவரும் ஈடில்லா பெருமை கொண்டு,
பெயரன் பெயர்த்தி களுடன்,
மண்ணில் நீடு வாழ வாழ்த்தும்,

- **சித்தி, சித்தப்பா** இவர்களுடன் **அத்தை.**
  அன்பில் கலந்து மகிழும்,
  **பாலாஜி, ஸ்ரீராம், சத்யா**
  இவர்களுடன் **யாழினி** 03-05-2017

## மணநாள் வாழ்த்து!

(கோபி & சத்யா)

03-05-2019

இன்னிய மணநாள் இன்று,
இனியதாய்த் தொடரும் வாழ்வில்,
நன்னிய நலங்கள் யாவும்
நலமுடன் பெற்று ஏகி,
மன்னிய பெருமைக் காத்து,
மருவிலாக் கீர்த்தியோடு,
எந்நாளும் வாழியவே!
அன்புடன்

**சித்தி, சித்தப்பா,**
**தம்பிகள், சத்யா,**
**பாட்டியுடன் யாழினி**

## மணநாள் வாழ்த்து! - 03-05-2021

மூவைந்து ஆண்டுகள் முழுதாய் நிறைந்து,
தேவை யென்னும் வாழ்வியல் கடந்து,
மாவிலைத் தோரணம் மகிழ்வுடன் கோத்து,
பூவாய் இரண்டு மகவைப் பெற்றுச்சீர்,
பாவையவளின் கைத்தலம் பற்றியக் காலம்;
தானாய் மனதுள் மகிழ்வுடன் தோன்றும்!
இரைந்தாண்டை இயைந்தே கடந்தால்,
சீராய் மகளின் மனையறம் தொடங்கும்!
வாரா நன்மைகள் தாமும்வந்தே நிறைய,
பெயரைப் பதித்து மகனும் எழுவான்!
துயரம் என்பதைத் தொலைவில் நிறுத்தி,
அயராதுழைக்கும் அன்பின் செல்வ,
அனைத்திலும் பெருமை அடைந்திடல் காண,
மனத்தால் நிறைந்து, மகிழ்வுடன் தானே,
மணநாள் தன்னில் வாழ்த்தும் அன்பின்,

**சித்தி, சித்தப்பா, தம்பிகள், அத்தை,**
**யாழினியுடன் சத்யா**